27.10.2025

OS No: 133/2015

பி.வா.சா. 1 திரு. விஜயா க/பெ லெட்சுமணன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1ம் வாதி பூங்கோதை மற்றும் 1ம் பிரதிவாதி மூக்காயி ஆகிய இருவரின் தந்தை பெயர் மாணிக்கம் என்றால் சரிதான். மேற்படி மாணிக்கத்திற்கு சொந்த ஊர் ஆபத்தார்ணபட்டி என்றால் சரிதான். மேற்படி ஊரில் மாணிக்கத்திற்கு சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதியும், 1ம்பிரதிவாதியும் தங்களுக்கு திருமணம் ஆகும் வரை மேற்படி மாணிக்கத்தின் வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மாணிக்கம் இருந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் தெரியாது. ஆபத்தார்ணபட்டியில் 1ம் வாதி, 1ம்பிரதிவாதியின் உறவினரான அர்ச்சுணன் என்ற ஒருவர் உள்ளாரா என்றால் உள்ளார். அர்ச்சுணனின் மகன் பெயர் மதி என்ற மதிவாணன் என்றால் சரிதான். மேற்படி மதி என்ற மதிவாணன் திமுக கட்சியில் உள்ளார் என்றும் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி திருமணம் ஆனது முதல் எங்கு இருந்து வந்தார் என்றால் கருத்தம்பட்டியில் இருந்து வந்தார். மூக்காயிக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 20 வருடம் இருக்கும் அவருக்கு பேரன், பேத்திகள் இருக்கிறார்கள். மூக்காயி திருமணத்திற்கு பின்பு ஆபத்தார்ணபட்டியில் வசிக்கவில்லை என்றால் சரிதான். அங்கு அவருடைய அப்பா வீட்டிற்கு வந்து செல்வார். 1ம் பிரதிவாதியின் பெயரானது ஆபத்தார்ணபட்டியில் உள்ள வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.2ல் 1ம் வாதி ஆபத்தார்ணபட்டியில் இருப்பதாக முகவரி விவரம் உள்ளதா என்றால் தெரியாது. மதி என்ற மதிவாணன் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அவர்கள் உறவினர்கள் அனைவரையும் திருமணம் முடிந்து வெளியே சென்றிருந்தாலும், ஆபத்தார்ணபட்டியில் வாக்காளர் பட்டியலில் அவர்களுடைய பெயரை நீக்கம்செய்திடாமல் வைத்துள்ளார் என்றால் தெரியாது. B அட்டவனையில் கண்ட சொத்தில் உள்ள வீடானது எந்த வருடம் யாரால் கட்டப்பட்டது

2010ம் வருடம் கட்ட ஆரம்பித்து 2011ம் வருடம் முடித்து விட்டோம் நாங்கள் தான் வீட்டை கட்டினோம். மேற்படி நான் கட்டியதாக சொல்லும் வீட்டில் எந்த வருடம் 1ம் வாதி, 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 2014 ம் வருடம் எனது கணவர் இறந்த பின்பு ஆக்கிரமிப்பு செய்தார்கள். மேற்படி 2014 ம் வருடம் மேற்படி நபர்கள் எனது வீட்டை ஆக்கிரமித்ததாக சொல்லும் சங்கதியை எனது நிரூபண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலம் பாரா 10ல் இந்த சொத்தின் சுவாதீனமும் இந்த பிரதிவாதியின் கணவர் வெளியூரில் இருந்ததினை அனுசரனையாக எடுத்துக்கொண்டு மேற்படி வீட்டின் சுவாதீனத்தை முறியடிக்கும் விதமாக பூட்டை உடைத்து வீட்டின் சுவாதீனத்தை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2014 ம் வருடம் வாதிகள், மற்றும் 1ம் பிரதிவாதி எனது வீட்டின் பூட்டை உடைத்து ஆக்கிரமிப்பு செய்திடவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் பி,வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் B அட்டவனை சொத்தை கிரையம் வாங்கியவுடன் அவர் பணத்தை கொண்டு வீடு கட்டி வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 புகார் மனு ரசீதுக்கான புகார் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் அதில் கண்ட தரப்பினர்கள் மீது கிரிமினல் வழக்கு எதுவும் போலீசார் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி நபர்கள் மீது கிரிமினல் வழக்கு போலீசார் பதிவு செய்திடவில்லை என்ற நிலையில் நானாவது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தல் தனி புகார் மனு அளித்து நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. 12 வருடத்திற்குள் எனது அனுபவத்தை தாவா B அட்டவனை சொத்தில் காட்டுவதற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால்சரியல்ல. மேற்படி புகாரானது பொய் என்பதால் தான் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும், 2015 ம்

வருடம் தாவா B அட்டவனை சொத்தில் உள்ள வீட்டின் கதவை உடைத்து ஆக்கிரமிப்பு எதுவும் செய்திடவில்லை என்றால் சரியல்ல. தாவா B அட்டவனை சொத்தில்ண Office Room ஒன்று தற்போது இருக்கிறதா என்றால் இருக்கிறது, மேற்படி Office Room உள்ளது என்பதை நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டிட நீதிமன்ற ஆணையர் நான் நியமிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கணவர் எங்கு வேலை பார்த்தார் என்றால் பரமக்குடியில் நெடுஞ்சாலைத்துறையில் வேலை பார்த்தார். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை எனது கணவர் வேலை பார்த்தார் என்றால் தெரியாது. எனது கணவர் வேலை பார்த்த சமயத்தில் நானும் அவரும் பரமக்குடியில் தான் இருந்தோம் என்றால் இல்லை நான் காரைக்குடியில் தான் இருந்தேன். தாவா சொத்தில் இருந்து காரைக்குடிக்கு இடையே உள்ள துரத்தை விட அதிகமான துாரம் பரமக்குடிக்கும், காரைக்குடிக்கும் உ ள்ளது என்றால் தெரியாது. எனக்கு சொந்த ஊர் எது என்றால் சிலநீர்பட்டி, எனது கணவர் காளாப்பூரில் இருந்தார். மேற்படி ஊரில் இருக்கும் நாங்கள் தாவா B அட்டவனை சொத்தை எதன் அடிப்படையில் கிரையம் பெற்றோம் என்றால் வாதிகள் 1ம்பிரதிவாதியும் கேட்டுக்கொண்டதற்காக கிரையம் வாங்கினோம். வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி எனக்கு சொந்தமா என்றால் அத்தை மகள், மாமன் மகள் என்ற வகையில் சொந்தம். தாவா B அட்டவனை சொத்தை 1ம் பிரதிவாதியிடம் இருந்து எனது கணவர் பி.வா.சா.ஆ.4 மூலமாக கிரையம் வாங்கியது தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியிடம் தாவா B அட்டவனை சொத்தை எனது கணவர் கிரையம் வாங்குவதற்கு முன்னால் அரசாங்கத்திடம் அனுமதி பெற்றுள்ளாரா என்றால் தெரியாது. மேற்படி கிரையத்திற்கான தொகை எனது கணவர் எவ்வாறு கொடுத்தார் என்றால் எனது நகையை காரைக்குடியில் உள்ள வங்கியில் அடமானம் வைத்து கிரைய தொகையான ரூ.91,000/- த்தை கொடுத்தார் எந்த வங்கி என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதிட விபரம் யார் சொன்னது அதில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என தெரியுமா என்றால் தெரியும். எனது சித்தப்பா அர்ச்சுணன் விவரம்

சொன்னார் அதில்அவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். பி.வா.சா.ஆ.4 எழுதியது எனக்கு தெரியாது என்றும் எனது நகை அடகு வைக்கப்பட்டு பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், மூக்காயி, 1ம்பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என மேற்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ன் கிரையத்திற்கு அச்சொத்திற்கான முன் ஆவணங்கள் எதைவும் 1ம் பிரதிவாதி கொடுத்தாரா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலம் 12வது பாராவில், கிரைய பெறப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமாக உள்ள கிரைய ஆவணம் மற்றும் முன் பாத்தியதை உள்ள அனைத்து ஆவணங்களும் எனது கணவர் வசம் ஒப்படைக்கப்பட்டதாக சங்கதி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை 1ம் பிரதிவாதி எனது கணவருக்கு எழுதி கொடுத்த உரிமை எதுவும் கொண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. பூங்கோதையிடம் சம்மத ஸ்டேட்மெண்ட் வாங்கப்பட்டதா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.4 எழுதப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கணவரிடம் சாட்சி கையெழுத்து வாங்கப்பட்டதா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதியும், அவருடைய கணவரும் நேசமாக தான் இருந்தார்களா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி மூக்காயிக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். 1ம் பிரதிவாதிக்கு கையெழுத்து மட்டுமே போட தெரியும் என்றும் 5ம் வகுப்பு வரை படிக்க வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய கணவருக்கு தெரியாமலும், முறையான விசாரணை இன்றியும் பொய்யாக பி.வா.சா.ஆ.5 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்குப்படி 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தை 2015 ம் வருடம் முதல் ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறார்கள் என்பது தான் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.6 ஆவண ரசீதுகள் 2016 ம் வருடம் முதல் 2022 ம் வருடம் வரையிலானவை என்றால் சரிதான். மின் கட்டணமானது 1ம் வாதி மற்றும் 1ம்பிரதிவாதி தாவா B அட்டவனை சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் காலத்தில் இருந்து செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனது பெயரில் அவர்கள் கட்டணம் செலுத்துகிறார்கள் நானும் சில காலங்களுக்கு கட்டணம் செலுத்தியுள்ளேன். வீட்டு வரியும், சொத்து வரியும், வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி கட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல நான் தான் கட்டி வருகிறேன். பி.வா.சா.ஆ. 6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகியவை தாவா வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8ன் பேரில் போலீசார் இருதரப்பினரை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். தாவா B அட்டவனை சொத்தில் உள்ள மரங்களை வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகள் வெட்டியது எந்த மரங்கள் என்றால் சாமிக்கு வைப்பதாக சொல்லும் மரம் ஆகும். யார் மரத்தை வெட்டியது என்றால் வெட்டியது யார் என்று தெரியாது மூக்காயி தரப்பினர்களால் வெட்டப்பட்டது. எத்தனை வருட மரம் என்றால் 10 வருடத்திற்கு மேல் உள்ள மரம் ஆகும், மேற்படி சொத்தை நாங்கள் கிரையம் வாங்கிய போதே அந்த மரம் இருந்தது. மேற்படி மரங்களை சேர்த்து கிரையம் எழுதப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.8 ஆவணமானது தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு 2016 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8ல் உள்ள கைரேகையில் LTIஎன குறிப்பிடப்பட்டு பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ரேகை என்னுடைய ரேகை தான். பி.வா.சா.ஆ.8ல் 1ம் பிரதிவாதியின் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். அழகு என்பவர் அதில் கையெழுத்து செய்துள்ளார் அவர் மூக்காயின் பங்காளி என சொன்னார்கள். பி.வா.சா.ஆ.8ல் அழகு என்பவரின் கையெழுத்து உள்ளதா என்றால் அதில் கையைழுத்து செய்தார். கையெழுத்து உள்ளதா என்பதற்கு நான் கண்ணாடி அணியவில்லை என்பதால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.8 தாவா B அட்டவனை சொத்தில் உள்ள வீட்டிற்கு

போலீசார் வந்து விசாரணை செய்து எழுதப்பட்டது. ரூ.500/- போலீசார் 1ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்று எனக்கு கொடுத்திட போலீசாருக்கு உரிமை இல்லை என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.8 போலீசார் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதி மரத்தை வெட்டவில்லை என்றும் பிரதிவாதியிடம் இருந்து போலீசார் ரூ.500/- பெற்று எனக்கு தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணமானது தாவா வழக்கில் எங்களுக்கு சாட்சியம் வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா B அட்டவனை சொத்து எனது அனுபவத்தில் இன்றைய தேதியில் இல்லை என்றால் சரியல்ல எனது அனுபவத்தில் தான் உள்ளது- தாவா B அட்டவனை சொத்தில் உள்ள வீட்டை நானோ, எனது கணவரோ கட்டவில்லை என்றும் அது எங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா B அட்டவனை சொத்து 1ம் பிரதிவாதி கணவர் பி.வா.சா.ஆ.1ன் படி அவருடைய பணத்தை கொடுத்து பாத்தியம் அடைந்து அவருடைய பணத்தை வைத்து அதில் வீடு கட்டி, அவரும் வாதிகளும், 1ம் பிரதிவாதியும் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறாகா தாவா B அட்டவனை சொத்தை அபகரிக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.27 16:35:42 +0530